DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.311/2025

Deposition of witness: PW1

| | | | |
|---|---|---|---|
| Name | யுவராஜ் | Taluk | |
| Father 's Name | பலராமன் | Village | |
| Age | 45 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **05.03.2026.** | | | |

**(Accused absent U/s.317 PFA)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

நான் எனக்கும், சேகர் வகையறாவுக்கும் இடைப்பட்ட கிரய ஒப்பந்தம் சம்மந்தமான சொத்து தொடர்புடைய வில்லங்க சான்றிதழ் எடுத்தேனா என்றால், எடுத்தேன். 17.10.2023 தேதியிட்ட கிரய ஒப்பந்த பத்திரத்தில், சேகர் மற்றும் அவரது வகையறாவால் ஏதேனும் வில்லங்கம் ஏற்படுத்தப்பட்டிருந்தாலோ அல்லது அது மறைக்கப்பட்டிருந்தாலோ, அதனை மேற்படி தரப்பினர் சரிசெய்ய தவறும்பட்சத்தில், ஏற்படும் விளைவுகள் குறித்த பரிகாரம் பற்றி மேற்படி ஒப்பந்த பத்திரத்தில் ஏதேனும் குறிப்பிட்டுள்ளோமா என்றால், குறிப்பிட்டுள்ளோம். மேற்படி சொத்து மீது வில்லங்கம் இருப்பது தெரிந்ததும், அதனை சேகர் வகையறா எவ்வளவு நாட்களில் சரிசெய்து கொடுப்பதாக என்னிடம் கூறினார்கள் என்றால், ஒரு மாதத்திற்குள் சரிசெய்து தருவதாக கூறினார். ஆனால், அதனை நீட்டித்துக்கொண்டே சென்றார். மேற்படி கிரயம் சம்மந்தமாக பெற்ற அட்வான்ஸ் தொகையை திருப்பி தருவது தொடர்பாக எந்த ஒரு ஒப்பந்தமும் எங்களுக்குள் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால் சரிதான். ஆனால், சேகர் வகையறா என்னிடம் அட்வான்ஸ் தொகையை 1 மாத காலத்திற்குள் திருப்பி கொடுத்துவிடுவதாக கூறியதால், எந்த ஒரு ஒப்பந்தமும் எங்களுக்குள் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. மேற்படி அட்வான்ஸ் தொகையில் ரூ.50,00,000/-ஐ சேகர் எனது வங்கி கணக்கில் எந்த தேதியில் திருப்பி அனுப்பினார் என்றால், தற்போது அது எனக்கு நியாபகமில்லை. மேற்படி பணம் எனது எந்த வங்கி கணக்கிற்கு வந்தது என்பது பற்றிய விவரத்தினை எனது புகார் மனுவிலோ அல்லது முதன்மை விசாரணை வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால், குறிப்பிடவில்லை, தேவைப்பட்டால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். இந்த வழக்கில் சேகர் மற்றும் வகையறாக்கள் வழக்கு தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளனரா என்றால் சேர்க்கப்படவில்லை, தர்மராஜிக்கு எதிராக மட்டும் தான் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். நானும், சேகர் வகையறாவும் சேர்ந்து, 16.07.2024 ல் கிரய முன்தொகை ரூ.1,42,00,000/-தொடர்பாக ஒரு ஒப்பந்தம் செய்தோம் என்றால், செய்தோம். எதிரி தர்மராஜை இதற்கு முன்பு சந்தித்துள்ளேனா என்றால், மேற்படி ஒப்பந்தத்திற்கு முன்பு சந்தித்ததில்லை. இது தொடர்பாக தர்மராஜிடம் ஏதேனும் பேசினேனா என்றால், பேசி, அவரும் முழு சம்மதம் தெரிவித்தார். ம.த.சா.ஆ-2ன், முதல் பக்கத்தின், 3வது வரியில் 25.07.2023 என்ற தேதியின் மீது கோடிடப்பட்டு, 17.10.2023 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி திருத்தம் குறித்து, 16.07.2024 தேதியிட்ட ஒப்பந்தத்தில், மேற்குறியீடு செய்துள்ளோமா என்றால்

செய்யவில்லை. மேற்படி ஒப்பந்தத்தில், பின்புறத்தில், 5வது வரியில் 01.08.2024 என கையால் எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி திருத்தம் குறித்தும், ஒப்பந்தத்தின் தரப்பினர்கள் மேற்குறியீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். 16.07.2024 தேதியிட்ட ஒப்பந்தத்தில், சொத்து விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். எனது வில்லங்கம் உள்ள சொத்தினை அந்த வில்லங்கத்தினை மாற்ற முடியாது என்று தெரிந்தும், நானும், சேகர் வகையறாவும் சேர்ந்து தர்மராஜிடம் ஒப்பந்தம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கானது ஒத்திவைக்கப்படுகிறது.**